IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, ERODE

STC No.1092/2025

Deposition of Witness PW3

| | | | |
|---|---|---|---|
| Name | : வித்யாதரன் | Father Name : | |
| Village | : | Calling | : |
| Taluk | : | Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 03.06.2026

சத்தியபிரமாணம் செய்யப்பட்டது.

எதிரி ஆஜர் இல்லை. குவிமுச பிரிவு 317ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது.

**முதல் விசாரணை**

நான் தற்போது ஈரோடு நகர காவல் நிலையத்தில் முதல் நிலை காவலராக பணிபுரிந்து வருகிறேன். 24.03.2025 அன்று நானும், உதவி ஆய்வாளர் பிரபாகரன், தலைமை காவலர் மாதேஸ்வரன் ஆகியோர் ரோந்து அலுவலாக நேதாஜி ரோடு, மணிக்கூண்டு, ஜின்னா வீதி ஆகிய பகுதிகளில் ரோந்து சென்று விட்டு வளையல் கார வீதி குப்பி பாலம் அருகில் காலை 9 மணி அளவில் சென்றபோது அங்கு சந்தேகப்படும்படியாக ஒரு நபர் நின்று கொண்டிருந்தார் அவரைப் பிடித்து விசாரித்த போது, அவர் தனது பெயர் நிகாத் என கூறினார்.

அவரை மேற்கொண்டு விசாரித்த போது மனித உயிருக்கு தீங்கு விளைவிக்க கூடிய கஞ்சாவை வைத்திருந்ததாக கூறினார். அவரிடம் சோதனை விருப்ப கடிதம் தயார் செய்து அவரிடம் கையொப்பம் பெற்று 9.30

S RAJKUMAR Digitally signed by S RAJKUMAR Date: 2026.06.03 18:58:25 +0530

மணிக்கு அவரை உதவி ஆய்வாளர் கைது செய்தார். சோதனை விருப்ப கடிதத்தில் உள்ள இரண்டாவது கையெழுத்து என்னுடையது தான். பின்னர் அவர் வைத்திருந்த கஞ்சாவை எடுத்து ஆய்வு செய்து பார்ப்பதற்காக அவரிடம் இருந்து சிறிதளவு கஞ்சாவை எடுத்து தீ வைத்து பார்த்தபோது அது கஞ்சா வாசனை வந்தது. பின்னிட்டு 9.45 மணிக்கு கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்து சுமார் 220 gram கஞ்சாவை கைப்பற்றி அதில் நானும் தலைமை காவலர் மாதேஸ்வரனும் கையொப்பம் செய்தோம். தற்போது என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள இரண்டாவது கையெழுத்து என்னுடையது தான். அதன் பிறகு அவரை 10.30 மணிக்கு நிலையம் அழைத்து வந்து குற்ற எண்.73/25, சட்டப்பிரிவு 123 BNS, 8(c)20(b)(ii)(A) NDPS Act வழக்கு பதிவு செய்யப்பட்டது.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

ரோந்து பணிக்கு நாங்கள் சீருடையில் சென்றோமா என்றால், உதவி ஆய்வாளர் மட்டும் சீருடையில் வந்தார். நாங்கள் சிவில் உடையில் சென்றோம். குப்பி பாலம் வாய்க்கால் அருகில் வீடு, கடைகள் நிறைய உள்ளது என்றால், வாய்க்காலுக்கு கிழக்கு பக்கம் வீடு, கடைகள் உள்ளது. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்திற்கு 9 மணிக்கு சென்றோம். காவல் நிலையத்திலிருந்து 8–8.15 மணிக்கு கிளம்பினோம். சம்பவ இடத்தில் ஜன நடமாட்டம் சுமார் 4, 5 பேர் இருந்தனர். ரகசிய தகவல் கிடைத்து ரோந்து பணிக்கு சென்றோமா அல்லது நாங்களாகவே சென்றோமா என்றால் நாங்களாகத்தான் சென்றோம்.

S RAJKUMAR
Digitally signed by S RAJKUMAR
Date: 2026.06.03 18:58:33 +0530

நாங்கள் சென்று பார்த்த போது சந்தேகத்திற்கிடமாக நின்று கொண்டு இருந்த நபரை தான் பிடித்து விசாரித்தோம். பொதுமக்கள் யாரையாவது சாட்சியாக இருக்க உதவி ஆய்வாளர் கேட்டாரா என்றால் கேட்டார் யாரும் முன் வரவில்லை. பொதுமக்கள் சாட்சியாக இருக்க சொல்லி கேட்டபோது 9.45 மணி இருக்கும். திரும்ப காவல் நிலையத்திற்கு வரும்போது 10.30 மணி இருக்கும். கைப்பற்றப்பட்ட கஞ்சாவை எங்கு வைத்து எடை போடப்பட்டது என்றால் சம்பவ இடத்திலேயே வைத்து எடை போடப்பட்டது. சம்பவ இடத்திற்கு, தராசு, கைப்பற்றுதல் மகஜர் படிவம், தீப்பெட்டி உட்பட கஞ்சா தடுப்பு நடவடிக்கைக்கான பொருட்கள் அனைத்தும் எடுத்துச் சென்றோம். சோதனை விருப்ப கடிதம், கைப்பற்றுதல் மகஜர் ஆகியவை யார் தயார் செய்தார்கள் என்றால், உதவி ஆய்வாளர்தான் தயார் செய்தார்.

அதை எழுதியது மாதேஸ்வரன் ஆவார். கைப்பற்றப்பட்ட கஞ்சாவை சம்பவ இடத்திலேயே வைத்து சீல் வைக்கப்பட்டது என்றால் இல்லை. காவல் நிலையம் எடுத்து வந்து தான் சீல் வைக்கப்பட்டது. சீல் வைப்பதற்கு உண்டான பொருட்கள் அனைத்தும் எடுத்துச் சென்றோம் என்றும், அங்கேயே சீல் வைக்காமல் காவல் நிலையம் வந்து சீல் வைத்திருப்பது என்பது நான் சொல்வது போல் வழக்கு சம்பவம் நடைபெறவில்லை என்பதால் தான் காவல் நிலையத்தில் வைத்து சீல் வைக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

நான் முதல் விசாரணையில் சொல்லியது போல் ரோந்து பணிக்கு செல்லவில்லை என்றும், அங்கு எதிரியை கைது செய்யவில்லை என்றும், அவரிடம் இருந்து வழக்கு சொத்தான கஞ்சாவை கைப்பற்றவில்லை என்றும்

S RAJKUMAR

Digitally signed by S RAJKUMAR
Date: 2026.06.03 18:58:41 +0530

சொன்னால் சரியல்ல. எதிரி சோதனை விருப்ப கடிதம் கொடுத்ததாக சொல்லி அது பொய்யானது என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. புள்ளிவிவர கணக்கிற்காக உயர் அதிகாரிகளின் அழுத்தத்தின் பேரில் பொய்யாக வழக்கு பதிவு செய்யப்பட்டு அதற்கு ஆதரவாக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரியை விசாரணைக்கு காவல் நிலையம் வரச் சொல்லி அவர் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. சோதனை விருப்ப கடிதம், கைப்பற்றுதல் மகஜர் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. சோதனை விருப்ப கடிதம் மற்றும் கைப்பற்றுதல் மகஜர் ஆகியவற்றில் உள்ள எழுதப்பட்ட கையெழுத்துக்கள் வித்தியாசம் உள்ளது என்றால் சரிதான்.

**மறுவிசாரணை இல்லை.**

S RAJKUMAR

Digitally signed by S RAJKUMAR
Date: 2026.06.03 18:58:47 +0530